<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No.41/2023 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.1<br>Defence |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சுகுமார் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : சுப்பிரமணியம் | ஜாதி | : |
| கிராமம் | : | இனம் | : |
| தாலூக்கா | : | வயது | : |
| Mail ID | : | Mobile No. | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 03.07.2023.

**<u>. ( முதல் விசாரணை ):</u>**

நான் ஏரிப்பாளையத்தில் வசித்து வருகிறேன். வியாபாரம் செய்து வருகிறேன். 22.02.2017 ம் தேதி மாலை சுமார் 5.00 மணி அளவில் எனது குழந்தைகள் விளையாடிக்கொண்டிருந்தார்கள் நான் அதை பார்த்துக் கொண்டிருந்தேன் அஜய் குமார் என்பவர் இரு சக்கர வாகனத்தில் கிழக்கிலிருந்து மேற்காக வந்தார் அப்போது எனது குழந்தைகள் விளையாடிக்கொண்டிருந்த கிரிக்கெட்டி ஸ்டெம்பை எட்டி உதைத்துவிட்டார் இது சம்பந்தமாக நான் எதிரி அஜய் இடம் கேட்டபோது அதை கேட்க நீ யாருடா தாயோழி என்று சொல்லி அந்த ஸ்டெம்பால் எனது வலது பக்க மூக்கிலும் இடது பக்க தோளிலும் அடித்துவிட்டார். சத்தம் கேட்டு வந்த அஜய் அம்மா யாரடா தேவடியா மகனே என்று சொல்லி என்னை கீழே தள்ளிவிட்டு முதுகில் எட்டி உதைத்துவிட்டார். அப்போது அஜய் என்னை பார்த்து இங்கே ஏன் விளையாடுகிறீர்கள் என்று சொல்லி ஒழுங்காக இல்லை என்றால் தொலைத்துவிடுவேன் என்று சொல்லி என்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லி கொலை மிரட்டல் விடுத்தார். எனக்கு எதிரி அடித்ததால் மூக்கில் ரத்தம் வந்தது.

நானும் என் மனைவியும் போக்கு வண்டி மூலம் உடுமலை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். பின்பு போலிசார் இரு சம்பந்தமாக என்னிடம் புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **(அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/-.K.Vijayakumar,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

# DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No.41/2023 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.2 |
| | | Defence |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சரிதா | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : சுகுமார் | ஜாதி | : |
| கிராமம் | : | இனம் | : |
| தாலூக்கா | : | வயது | : |
| Mail ID | : | Mobile No. | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 03.07.2023.

**. ( முதல் விசாரணை ):**

நான் ஏரிப்பாளையத்தில் வசித்து வருகிறேன். இல்லத்தரசியாக உள்ளேன். 22.02.2017 அன்று மாலை 4.30 மணிக்கு எனது குழந்தைகள் 3 பேரும் என் வீட்டு வாசலில் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அப்போது எங்கள் வீட்டிற்கு கிழக்கு புறம் உள்ள அஜய் என்பவர் மேற்கு புறமாக பைக்கில் வந்தபோது குழந்தைகள் விளையாடிக்கொண்டிருந்த ஸ்டெம்பை காலால் எட்டி உதைத்தார் அந்த ஸ்டெம் என் மகன் மேல் விழுந்துவிட்டது. இது சம்பந்தமாக என் கணவர் எதிரி அஜய் இடம் கேட்டபோது என் கணவரை எதிரி அடித்துவிட்டார். பின்பு என் கணவரை பார்த்து ஆக்ரோசமாக இந்த பகுதியில் ஒன்று நீ இருக்க வேண்டும் அல்லது நான் இருக்க வேண்டும் என்று கூறி

மிரட்டினார். அப்போது அவர் அம்மாவும் உடன் இருந்தார் என் கணவருக்கு எதிரி அடித்ததில் ரத்தம் வந்தது. என் கணவரை உடுமலை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்தேன். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை</u>**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/-.K.Vijayakumar,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.